[நண்பகல் 12—00]

இ. பகுதி நேரக் கிராம அனுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவு, 1891,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

Thiru V. KRISHNAMURTHY: I rise to oppose the introduction of the Bill.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, அரசாங்கத்தினால் ஏற்கனவே கொண்டு வரப்பட்ட அவசரச் சட்டத்தை முறைப்படுத்துகின்ற இந்த சட்டத்தினை இந்திய அரசியல் சட்டம் 310, 311 ஆகிய விதிகளின் கீழ், அரசாங்கச் சிப்பந்திகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிற அடிப்படை உரிமைகளை எடுக்கின்ற விதத்திலே இந்த ஆர்டினன்சை அதை முறைப்படுத்துகின்ற சட்டமாக இருக்கிற காரணத்தினாலே, ஏறக்குறைய 24,000 அரசாங்கச் சிப்பந்திகளை ஒரே ஒரு பென் ஸ்டிரோக் என்று சொல்வார்களே அதுபோன்று வழியில் அவர்களுடைய உரிமைகளை எல்லாம், அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்ற உரிமைகளை எல்லாம் எடுத்து, அதுவும் இரவு நேரத்தில் எடுத்து அதிகாரிகள் மூலமாக அந்த கிராம அதிகாரிகளிடம் இருந்து— ஏறத்தாழ 24,000 அதிகாரிகளுடைய ரெக்கார்டுகளை எல்லாம் கைப்பற்றி இருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. இந்த ஆர்டினன்ஸ் செல்லுமா, செல்லாதா என்கின்ற பிரச்சினை உச்ச நீதி மன்றத்திலே அனுமதிக்கப்பட்டு இடைக்காலத் தடையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அந்த 24,000 கிராம அதிகாரிகளும் சம்பளம் கூட வாங்கி வருகிறார்கள். அந்த நிலையில் இந்த சட்டத்தை இங்கே பிரேரேபிப்பது அரசியல் சட்டத்திற்கும், மனிதாபிமானத்திற்கும் பொருந்தாது என்கிற காரணத்தால், இந்தத் துப்பாக்கி துறைத், தனத்தின் மூலம் இவர்களை எல்லாம் வீட்டுக்கு அனுப்புகின்ற முறையைக் கண்டித்து நான் இதை எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன் உள்ள கேள்வி:—

''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவு'' பேரவை முன் அறிமுகம் செய்யப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; தலைவர் அவர்களே இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

1981 ஜனவரி 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுக செய்யப் பெற்றிருக்கிறது.

ஈ. வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. எஸ், இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வடிவு'' பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே. ஆளுநர் உரை மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். உரையிலே குறிப்பிட்டுள்ளவாறு நம்முடைய ஆளுநர் அவர்கள் நடந்து முடிந்த உலகத் தமிழ் மாநாட்டை வெகுவாக நல்ல முறையிலே பாராட்டி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட மாநாடு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சென்னையிலே நடைபெற்றது. அந்த மாநாடு நடைபெறுவதற்கு முன்னாலே தமிழகத்திலே உள்ள அத்தனை தமிழ் பால் அன்புகொண்ட தொழில் அதிபர்களை அழைத்து, அந்த மாநாடு நடத்துவதற்கு அரசு பணம் முழுமையாக செலவிடக் கூடாது என்ற கருத்தில் தொழில் அதிபர்களைப் பங்குகொள்ளச் செய்து, செலவினை அவர்களையே ஏற்கச் சொன்னார்கள். அந்த மாநாடு உலகத்திலே உள்ள பல நாடுகளில் இருந்து வந்த அத்தனை தமிழ் அறிஞர்களாலும் எல்லா வகையிலும் பாராட்டப்படுகின்ற வகையில் அமைந்து இருந்தது என்பதை நாம் எல்லாம் அறிவோம்.

இன்றைய தினம் நடைபெற்ற மாநாட்டிலே விளம்பரப் பிரியன் தலைவராக நின்று நடத்துகிற மாநாடு போல், பல கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு இருக்கிறது. இந்த மாநாடு நடத்துவதற்கு இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்பிருந்தே அந்த மாநாட்டை மதுரையில் நடத்துப் போகிறோம் என்று தெரிவித்தார்கள். ஏறக்குறைய 17 கோடி ரூபாய் செலவு செய்து நடத்தப்பட்டுள்ள அந்த மாநாடு ஒரு திட்டமிடப்பட்ட முறையில் நடத்தப்பட வேண்டாமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.